மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மேசையைத் தட்டி வரவேற்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உங்களுக்குப் புரிந்துள்ளது என்று நினைக்கிறேன்.

6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்தல். 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேயைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

LEGISLATURE TAMIL NADU ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்:

முற்பகல் 10–45 மணி

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்,''

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

7. மானியக் கோரிக்கைகள், 1991–92—விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 12—தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண். 12 – தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமயஅறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 7,84,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.